**தேதி:- 12.03.2020 அசல்வழக்கு எண்.101/2017 வா.சா.1 (ரவி)**

**குறுக்குவிசாரணை தொடர்ச்சி:-**

10.10.1968 ல் புலஎண.244/2 ன் மற்றொருபகுதியைப் பொறுத்து ஒரு ஒத்திப்பத்திரம் ஏற்படுத்ப்பட்டது என்றால் சரிதான். மொத்தச்சொத்தில் மேற்குப்பகுதியிலுள்ள 1.18 ஏக்கர் குறித்துதான் ஒத்தி ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். ஒத்திப்பத்திரத்தில் என் தகப்பனார்தான் ஒத்தித்தொகையை வாங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்குத் தெரியாது. ஒத்திப்பத்திரத்தில் என் தகப்பனாருக்கு மேற்குப்பகுதிதான் பாத்தியப்பட்டுள்ளதாக கண்டுள்ளது என்றால் எனக்குத் தெரியவில்லை. மேற்படி ஒத்திபத்திரத்தைதான் பின்னால் ஏற்படுத்தப்பட்ட கிரையப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். அதனால் ஒத்திப்பத்திரம் குறித்த முழுவிபரமும் எனக்குத் தெரியுமென்றால் தெரியாது. 1 முதல்3 பிரதிவாதிகளின் எதிர்வழக்குரையில் மேற்படி ஒத்திப்பத்திரத்தில் மேற்படி புலஎண்ணில் மேற்குப்பகுதியான 1.18 ஏக்கர் என் தகப்பனாருககு பாத்தியப்பட்டிருந்ததாக குறிப்பிட்டுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் எனக்குத் தெரியாது. அந்த விபரங்கள் எனக்கு நன்றாகத் தெரியுமென்றும் இந்த வழக்கிற்காக அதை மறுக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. அந்த சங்கதி குறித்து நான் பதிலுரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்குத் தெரியவில்லை. தாவாச் சொத்து சம்பந்தமாக வா.சா.ஆ.6 ஒத்திப்பத்திர நகலை தாக்கல் செய்துள்ளேன். அதை படித்துப் பார்த்தேன். வா.சா.ஆ.6 ல் எங்களில் மூணாவது இனத்தின் பங்கிற்கு ஏற்பட்டதுமான என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒத்தித்தொகையை மூணாவது இனத்தின் குடும்பச்செலவுக்காக வாங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் அதற்கு முன்பாக மூன்று இனத்திற்கும் சேர்ந்துதான் ஒத்தியை வைத்திருப்பதாக காட்டப்பட்டுள்ளது. அதில் மூன்றவாது இனம் என்று குறிப்பிடப்பட்டிருப்பது 1 முதல்3 பிரதிவாதிகளின் தகப்பனாரான ஜெயராம். வா.சா.ஆ.16 ல் சுந்தர்ராஜூநாயுடுவின் மற்ற ஆறுவாரிசுகளை காட்டவில்லை என்றால் அவர்கள் இறந்துவிட்டதால் காட்டவில்லை. அவர்களுக்கு பதினாறு வாரிசுகள் உள்ளார்கள். அவர்களை

வா.சா.ஆ.16 ல் காட்டவில்லை. வா.சா.ஆ.16 கொடிவழிஜாபிதாவில் இறந்தவர்களை காட்டவில்லை என்பதுதான் என்னுடைய வாதமென்றால் சரிதான். வா.சா.ஆ.16 ல் இறந்து போன சங்கிலிநாயுடு, சுந்தர்ராஜநாயுடு, கோவிந்தராஜநாயுடு, ஜெயராமன் மற்றும் ராணி ஆகியோர் இறந்து போன நபர்களாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.16 ல் சங்கிலிநாயுடுவின் மனைவி, குழந்தைகளை காட்டவில்லை. நீதிமன்றத்தை ஏமாற்றி எங்களுக்கு சாதகமான தீர்ப்பு பெறுவதற்காக வா.சா.ஆ.16 ஐ மோசடியாக தயாரித்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வீடுகளை மட்டும் பிரித்துக் கொண்டு மற்ற சொத்துக்களை பிரிக்காமல் பொதுவாக வைத்திருப்பதாக காட்டுவதற்கு ஆவணங்கள் இல்லை. வா.சா.ஆ.3 மற்றும் 4 ஆவணங்கள் 1977-78 ஆண்டுகளுக்கு சம்பந்தப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ-5 ல் ஜெயராமன் பெயர் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணம் 1988 ஆம் ஆண்டிற்கு சம்பந்தப்பட்டது என்றால் சரிதான். சுந்தர்ராஜ், கோவிந்தராஜ் ஆகியோர் பெயரை மட்டும் போட்டு வா.சா.ஆ.5 ஐ நான் உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஒத்தியை ஜெயராம் மனைவி ராணி தான் மீட்டார் என்றால் எங்கள் அனுமதியுடன் தான் மீட்டார். என் தகப்பனார் மற்றும் அவருடன் பிறந்தவர்களின் அனுமதியுடன் ராணி மீட்டதாக வழக்குரையிலும், வருவாய்துறை நடவடிக்கையிலும் நான் சொல்லவில்லை. மேற்படி ராணி சொத்தை மீட்கும் போது என் தகப்பனார் உயிருடன் இல்லை என்றால் சரியல்ல. 2008 க்கு முன்பாகவே 1 முதல்3 பிரதிவாதிகள் சொத்தை விற்றது எனக்கு நன்றாகத் தெரியுமென்றால் சரியல்ல. தாவாச சொத்து பின்னிட்டு மூன்று நபர்களிடம் சொத்துமாற்றம் செய்யப்பட்டது என்றால் சரிதான். உடனே தெரிந்து கொண்ட நான் சிவில்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தால் பரிகாரம் கிடைக்காது என்ற எண்ணித்தில் வருவாய்துறையில் நடவடிக்கை எடுத்து கிரையம் பெற்ற நபர்களை பணிய வைக்க வேண்டுமென்ற எண்ணத்தில் நடவடிக்கை எடுத்தேன் என்றால்

சரியல்ல. சொத்தின் மதிப்பு உயர்ந்துவிட்டதால் 7,8,9 பிரதிவாதிகளின் பணம் பறிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.